

# வாழ்க்கைத் தோணி!



ஆதியாய் நின்ற அந்தப் பரம்பொருள் தந்ததாம் வாழ்விது!
நீதியாய் பிறத்தலும் இறத்தலும் இயன்நிலை ஆகிட,
மீதியாய் நம்முடல் மண்ணில் வீழ்வதும் ஒருநாள்!
சோதியாய் இறையவன் சொந்தமாய்த் தெரிவானோ!



ஆக்கலும் அழித்தலும் நீக்கலும் நிறைத்தலுமாய்,
போக்குடை நியதியைப் புரிந்தவர் விளம்பிட,
தாக்குடை மனமோ கொஞ்சம் ஆறுதல் காணும்!
தேக்கமில் வாழ்வோ! தெளிந்த வாழ்வோ!!




நீதியாய் ஓர்நாள் நிறைவதும்தான் ஏனோ?
ஆதியாம் பரம்பொருள் அளித்த வாழ்வில்,
நீதியாய் இவையே நிலைத்தல் ஆகுமோ?
பாதியாய் மனத்தைப் பகுத்தே வைத்து,



பேதமை உலகியல் புரிதலும் ஆகுமோ?
மீதியாய், உண்ணலும் உறங்கலும் ஆகிட,
வாதமாய் வாழ்வியல் அறங்களும் அறிவமோ!
பூதமாம் உலகிதில் இறத்தலும் பிறத்தலும்,

இயன்நிலை ஆகிட, ஏதுநாம் அறிந்தோம்?
இயலாய் மனத்தில் எழும்பும் கேள்விகள்,
புயலாய் சுழன்றே புதியன கேட்கும்!
இயலாம் வாழ்விது எங்கே நிறையும்?




யாவுமே நிலையில்லை, யாவுமே மனத்தின்,
மேவிய சிந்தையின் மலரும் பூக்களாய்,
கூவிட வைத்தால், இறையே நிறைந்திட,
இயல்நிலை வாழ்வு அமிழ்தம் ஆகுமே!



**கவிவளவன்**
05-05-2021 (07.15AM)